செ.வெ.எண்:21/2018 நாள்:10.01.2018

**சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், பெரும்பச்சேரி கிராமத்தில் 217 பயனாளிகளுக்கு ரூ.25,98,600/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**





சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், பெரும்பச்சேரி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 217 பயனாளிகளுக்கு ரூ.25,98,600/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய்த்துறை மூலம் 56 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, உழவர் அட்டை போன்றவற்றிற்கான ஆணைகளையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணை, 14 பயனாளிகளுக்கு புதிய உறுப்பினர்களுக்கான பதிவு அட்டைகளும், வேளாண்மைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தேசிய எண்ணைய் வித்து உற்பத்தி 2017-2018 திட்டத்தின் கீழ் 100 சதவிகிதம் மானியத்தில் நிலக்கடலை மினிக்கிட்டையும், 1 பயனாளிக்கு ரூ.3,000/- மானியத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விசைத் தெளிப்பானையும், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.300/- மானியத்தில் வரப்பு பயிர் ஆமணக்கு விதையினையும், 1 பயனாளிக்கு ரூ.2,000/- மானியத்தில் சூரிய ஒளி மின்விளக்குப் பொறியினையும், மாற்றுத் திறனாளியின் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு விலையில்லா சக்கர நாற்காலிகளையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு தலா ரூ.2,000/- மானியத்தில் ரூ.20,000/- மதிப்பில் தார்பாய், பழக்கூடைகளையும், பொதுச் சுகாதாரத் துறையின் சார்பில் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் தலா ரூ.4,000/- வீதம் 7 பயனாளிகளுக்கு ரூ.28,000/- ஆணைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.4,000/- வீதம் 5 பயனாளிகளுக்கு ரூ.20,000/- மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், மகளிர் திட்டத்தின் சார்பில் 4 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் ரூ.7,00,000/- மதிப்பிலான கடன் தொகைக்கான காசோலைகளையும், 5 மாற்றுத் திறனாளிகளுக்கு கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தனிநபர் கடனாக தலா ரூ.20,000/- வீதம் ரூ.1,00,000/- காசோலைகளையும், சமூகநலத் துறையின் சார்பில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.25,000/- வீதம் ரூ.1,00,000/- மற்றும் ரூ.50,000/- வீதம் ரூ.2,00,000/-க்கான ஆணை மற்றும் 8 கிராம் வீதம் 8 பவுன் தங்கத்தினையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 2 பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.50,000/- வீதம் ரூ.1,00,000/- மதிப்பிலான வைப்பு நிதி பத்திரங்களையும், நகரக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் 20

பயனாளிகளுக்கு விவசாய நகைக் கடனாக ரூ.5,75,300/- கடன் தொகைக்கான ஆணைகளையும், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் 10 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/- வீதம் ரூ.2,50,000/-க்கான கடன் தொகைக்கான ஆணைகளையும், மாவட்ட முன்னோடி வங்கி மூலமாக 10 நெசவாளர்களுக்கு ரூ.50,000/- வீதம் ரூ.5,00,000/- கடன் பெறுவதற்கான ஆணைகளையும், வட்ட வழங்கல் துறையின் சார்பில் 60 பயனாளிகளுக்கு திருத்தம், புகைப்படம் மாற்றம் உட்பட குடும்ப அட்டைகளை வழங்கி ஆக மொத்தம் 217 பயனாளிகளுக்கு ரூ.25,98,600/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையுரையில் தெரிவித்ததாவது,

மக்கள் தொடர்பு முகாம் நடைபெறும் கிராமத்திற்கு சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களின் பிரச்சனைகளை களைவதே இந்த முகாமின் முக்கிய நோக்கமாகும். அதேபோன்று இன்று நடைபெறும் மக்கள் தொடர்பு முகாமிற்கு முன்பாகவே ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று 1400 விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், இன்று 217 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் ஆணைகள் வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

மேலும், மகளிர் திட்டம் மூலம் திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் இந்த கிராமத்தில் நடைபெற்றதில், 38 பேர்கள் கலந்து கொண்டதில் 3 பேர்கள் இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ளச் சென்றுள்ளார்கள். எதார்த்தத்தைப் புரிந்து கொண்டு வாய்ப்புகள் உள்ள போது அதனைப் பயன்படுத்தி பிடித்துக் கொள்ளாதவன் வாழ்க்கையில் உயரமுடியாது என்றும், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நபார்டு வங்கி ஆகிய 3 வங்கிகளும் இணைநது நடத்தும் கிராம பயிற்சி மையத்தில் அழகு சாதன பொருட்கள் தயாரிக்கவும், மின் பொருட்கள் சரிபார்ப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும், இதுபோன்ற பயிற்சிகளை படித்த பெண்கள் மற்றும் இளைஞர்கள் தெரிந்து கொண்டு பயன்பெறுமாறும் கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஊரக வளாச்சி முகமையின் மூலம் பண்ணைக் குட்டைகள், உரக்குழி அமைக்க தனிநபர் கடன் வழங்கப்படுவதாகவும், விவசாயப் பெருமக்களுக்கு பண்ணைக் குட்டைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனவும், குறைந்த மழையில் உங்கள் பயிர்களை காப்பாற்ற முடியும் என்றும், பண்ணைக் குட்டைகள் அமைத்து பயன்பெறுமாறும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து, நெகிழி என்ற பிளாஸ்டிக் பயன்பாட்டினை அறவே தவர்க்குமாறும், அதனால் மனிதர்களுக்கு கேன்சர் உள்ளிட்ட நோய்கள் உருவாகிறது என்றும், கடைகளுக்கு செல்லும் போது துணிப்பைகளை பயன்படுத்துமாறும், பழக்கம் வழக்கமாகி கலாச்சாரமாக மாறுகிறது. நம்முடைய பழக்கத்தை மாற்றி பிளாஸ்டிக்கை தவிர்த்து சிவகங்கை மாவட்டத்தை பிளாஸ்டிக் இல்லாத மாவட்டமாக மாற்ற பொதுமக்களாகிய நீங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, இளையான்குடி ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளை பார்வையிட்டும், அங்கு வழங்கப்படும் உணவின் தரத்தை பரிசோதித்தார். பெரும்பச்சேரி ஊராட்சியில் மகளிர் திட்டத்தின் மூலம் இ.சேவை மையத்தினை துவக்கி வைத்தும், அதனைத் தொடர்ந்து, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை, மக்காத குப்பைகள் தரம் பிரிக்கப்படுவதையும், தனிநபர் உரக்குழிகளையும், நாற்றங்கால் பண்ணையையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்முகாமில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, இளையான்குடி வட்டாட்சியர் திரு.கண்ணதாசன், தனி

வட்டாட்சியர் திரு.திருநாவுக்கரசு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.